மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஈ). வேளாண் பல்கலைக் கழக (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறிய.து

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

8. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்.)

(அ) மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/1992), மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

* மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/1992) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு இப்போது 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு திருத்தச் சட்டமுன்வடிவுவைக் கொண்டு வந்திருக்கின்ற இந்த விவாதத்தில் பேச அனுமதி அளித்ததற்காக முதற்கண் தங்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் நான் பலமுறை வற்புறுத்தி இருக்கிறேன். இந்த மதுவிலக்குச் சட்டத்தில் சற்றுக் கடுமையை இந்த அரசு கடைபிடித்தாக வேண்டும். ஏற்கெனவே புரட்சித் தலைவர் அவர்கள் இருந்த காலத்திலே இந்த மதுவிலக்குச் சட்டத்தில் குற்றங்களை எல்லாம் நான்—பைலபிள் குற்றம் என்று ஜாமீனிலே விடக் கூடாத குற்றங்களாகக் கருதி, பொதுவாக சாராயத்தை ஒருவர் வைத்திருப்பாரேயானால், அல்லது கடத்துவாரேயானால், அவையெல்லாம் நான்—பைலபிள் குற்றமாக அப்போது இருந்தது. அதன் காரணமாக பொதுவாக ஒருவர் கைது செய்யப்பட்டால்

*21—9—1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.